**கவனிக்க.-** 2008.06.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1556 - 2008 ජූනි 27 වැනි සිකුරාදා - 2008.06.27**

1556 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 630 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 641 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூலை 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூன் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்திச் செயல்திட்டம்
[2197-SRI (SF)]

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப அபிவிருத்திச் செயல்திட்டமானது வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்பவியலாளர்கள், கைத்தொழில்நுட்பவியலாளர்களுக்கான வழங்கல்களுக்கும் கேள்விக்கும் இடையிலான வித்தியாசத்தை சீர்செய்வதற்கான அரசாங்கத்தின் மூலோபாயங்களுக்கு பின்வருமாறு உதவிவழங்குவது செயற்திட்டத்தின் நோக்கமாகும் :-

(1) தொழில்நுட்பவியல் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்காக தொழில்நுட்பவியல் கல்லூரிகளை (CoTs) வலுவூட்டல்.

(2) சந்தையின் கேள்வி நிலைமைகளுக்கேற்ப தொழில்நுட்பக்கல்வி, பயிற்சி (TEVT) கட்டமைப்பொன்றுக்கு உதவி வழங்குவதற்காக வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சையும் (MV&TT) சம்பந்தப்பட்ட நிறுவனங்களையும் வலுவூட்டல் ; மற்றும்

(3) தொழில்நுட்ப, தொழில்நுட்பவியல் கல்வி தொடர்பில் கவனஞ் செலுத்துகின்ற தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தை உருவாக்குதல் (Univotec)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் உதவி வழங்கப்பட்ட திறன் விருத்தி செயற்றிட்டத்தின் (SDP) ஏற்பாடுகளின் மூலம் விசேடமாக தேசிய தொழில்சார் தகைமைகளின் (NVQ) வட்டத்திற்குள் இச் செயற்றிட்டம் கட்டியெழுப்பப்படும்.

தேசிய தொழில்சார் தகைமைகள் 5-7 மட்டங்களை மையமாகக்கொண்டு தரமான வினைத்திறன்மிக்க நிலையான தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில்பயிற்சியை விருத்தி செய்தல், உதவுதல் மற்றும் உறுதி செய்வதற்காக வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்கள் இச் செயற்றிட்டத்தின் மூலம் வலுவூட்டப்படுகின்றன. தொழில்நுட்பக்கல்வி, தொழில்பயிற்சித துறையின் தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவும், மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வி, தொழில்பயிற்சி துறையில் ஈடுபடுவதற்கும், பட்டமொன்றைப் பெறுவதற்கான மாற்றுக் கல்விகளையும், தொழில்சார் பயண வழியொன்றை செய்து கொடுப்பதற்கும், தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத்தை உருவாக்குவதற்கும் அரசாங்கத்திற்கு இச்செயற்றிட்டம் உதவுகின்றது. ஏனைய பணிகளில் செயற்றிட்டத்தினால் தொழில்நுட்பக்கல்வியியல் பட்டதாரி (B. Teach Ed.), தொழில்நுட்ப விஞ்ஞானப்பட்டதாரி (B. Teach), போன்ற பட்டங்களுக்கான வேலைத்திட்டங் களை அபிவிருத்தி செய்வதும் அவ்வேலைத் திட்டங்களை வழங்குகின்ற தொழில்சார் தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகங்களைக்கொண்ட நிறுவனங்களின் வசதிகளும் உபகரணங்களும் மேம்படுத்தப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விடயப்பரப்புகளின் 5-6 ஆம் மட்டங்களின் தேசிய தொழில்சார் தகைமைகளை அடைந்து கொள்வதற்கு பயிற்சி பெறுவோருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதனூடாக உத்தேச தொழில்நுட்பக் கல்லூரி மூலம் இத்துறைக்கு நேரடியாக உதவி வழங்கப்படும்.

2006 ஆம் ஆண்டு முதல் 5 வருட காலங்களுக்கு இச் செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

கொழும்பில் அமைந்துள்ள செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் பிரிவின் (P.L.U.) பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரஜைகளான உரிய தகைமைமிக்க அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) செயற்றிட்ட முகாமையாளர் (நிறுவன அபிவிருத்தி).- பதவி 1.

**கடமைகளும் பொறுப்புக்களும்.**- பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படுவது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுதல் -

(1) தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக வேலைத்திட்டங்களை நல்லமுறையில் பேணி வருதல்.

(2) உத்தேச தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிக்கான செயற்றிட்ட நிறுவனங்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான உபாயமுறைகள், மூலோபா யங்கள், வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாட்டு அபிவிருத்தி போன்ற தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் ஆலோசகர்களினால் இனங்காணப்பட்டுள்ள நடவடிக்கைகளில் செயற்றிட்டத்தின் நிறுவ னங்களின் உள்நாட்டு, ஔிநாட்டு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப் புக்களின் உத்தியோகத்தர்களது சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

(3) ஒருங்கிணைப்பு வேலைத்திட்டங்களும் உட்பட தொழில்நுட்ப வியல் கல்லூரி மற்றும் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத் தின் மாணவர்களைத் தெரிவுசெய்வது மற்றும் அனுமதிப்பது பற்றிய முறைகள் தொடர்பான நடவடிக்கை களை ஒருங்கிணைப்புச் செய்தல்.

(4) மூன்றாம் நிலை, தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யும் ஒழுங்கு முறைகளை முறைப்படுத்துவதும் நிறுவனத்தின் கணக்காய்வு பரிசோதனையும்.

(5) தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் இனங்காணப்பட்ட பாடநெறிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட திறமைகளையும், பாடவிதானங்களையும், கற்கை உபகரணங்களையும் நிர்ணயித்தல்.

(6) கைத்தொழில்துறையின் ஒத்துழைப்புடன் கற்பித்தல், பயிற்றுவித்தல் உபகரணங்களை இனங்காணுவதற்காக உதவுதல்.

(7) செயற்றிட்ட பணிப்பாளரினால் பொறுப்பளிக்கப்படுகின்ற வேறு பணிகள்.

2. **செயற்றிட்ட முகாமையாளர்** (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்) – பதவி 1

**கடமைகளும் பொறுப்புக்களும் :**

(1) ஏற்பாடுகளின் அடிப்படையிலான வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்யும் கட்டமைப்பு, மாணவர்களைப் பதிவு செய்தல், நிபுணர்களைப் பதிவு செய்தல் தொடர்பான ஒழுங்குமுறைகளின் அபிவிருத்தி.

(2) MIS மற்றும் EMIS இனங்காணுவது, அபிவிருத்தி ஏற்பாடுகளின் அடிப்படையிலான வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்யும் கட்டமைப்பு, மாணவர்களைப் பதிவுசெய்தல், நிபுணர்களைப் பதிவு செய்தல் போன்றவற்றுக்கான மென் பொருள்களை (Software) ஏற்படுத்தல்.

(3) ஏற்பாடுகளின் அடிப்படையிலான வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்யும் கட்டமைப்பு, மாணவர்களைப் பதிவு செய்தல், நிபுணர்களைப் பதிவு செய்வதை அமுல்படுத்துவதற்காக அபிவிருத்தி செய்யப்பட் டுள்ள உபாயமுறைகள், ஒழுங்குவிதிகள், மென்பொருள் மற்றும் கைநூல்களை நிறுவனமயப் படுத்தல்.

(4) தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்களில் MIS மற்றும் EMIS ஐ ஸ்தாபிக்கும் பொறுப்பும் அவற்றை அமுல்படுத்துவதும்.

(5) தொழில்நுட்பக்கல்வி, தொழில்சார் பயிற்சித் துறைக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் நவீனமுறைகள் மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தியை அறிமுகம் செய்யும் பொறுப்பு.

மேலுள்ள 1-2 பதவிகளுக்கான தகைமைகளும் அனுபவமும்.- அங்கீகரிக் கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் பட்டயமும்/கூட்டு உறுப்பினர்/குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு மற்றும் நன்கொடை செயற்றிட்டங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் ஆகக் குறைந்தது 8 வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம் அல்லது நன்கொடை செயற்றிட்டங்களில் 1 ஆம் வகுப்பு மட்டத்தில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்துடன் அரசாங்க நாடளாவிய சேவை ஒன்றில் குறித்த துறையிலும் அதற்குச் சமமான நிலையிலும் 1 ஆம் வகுப்பு உத்தியோகத்தராக இருத்தல்; மற்றும்

இலங்கை தொழில், தொழில்நுட்ப பயிற்சிப்பிரிவு, அதன் கொள்கைகள் மற்றும் அதன் செயல்முறைகள் தொடர்பான சிறந்த அறிவு.

***மேலே 1-2 பதவிகளுக்கான தொழில்சார் நிபுணத்துவம் :***

(1) செயற்றிட்டத்திற்குத் தேவையானவாறு தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதும் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு உதவுவதும்.

(2) தேவையான நிபுணத்துவத்தை துறையின் உரிய செயற்றிட்டப் பணிகளை நிறைவேற்றுவதற்கு சுயமாக செயற்படுவதற்குள்ள ஆற்றல்.

(3) ஏனைய குழு உறுப்பினர்களின் நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் உருவாக்கி குழு ரீதியான சூழலில் வினைத்திறனுடன் செயற்படும் ஆற்றல்.

(4) அமுல்படுத்துவதன் சிக்கல்களைப் பகுப்பாய்வு ரீதியாக ஆய்வு செய்து தீர்த்துவைக்கும் ஆற்றல்.

(5) கணனி அறிவு.

(6) எழுத்து மூலமான மற்றும் பேச்சுத்திறன் தொடர்பான ஆங்கில அறிவில் உயர்மட்ட நிபுணத்துவம்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு விண்ணப்ப தாரர்கள் 57 வயதுக்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

***வேதனம்.***- விண்ணப்பதாரர்களின் தகைமை, அனுபவத்தின் அடிப்படை யில் இணங்கிக்கொள்ள முடியும். (2007.04.05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் அடிப்படையில்.)

பொது நிபந்தனைகள்.- (1) ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரினதும், சேவை வழங்குநரினதும் பங்களிப்பு முறையைச் சம்பளத்தில் 8% உம், 12% உம் ஆகுமென்பதுடன் ஊழியர் நம்பிக்கை நிதிக்காக (EPF) சேவை வழங்குநரின் பங்களிப்பு சம்பளத்தில் 3% ஆகும்.

(2) முழு நேரபதவிகளான இப்பதவிக்கு முதலாவது வருடகாலப் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படுவதுடன் செயலாற்றுகையின் அடிப்படையில் வருடத்திற்கு வருடம் ஒப்பந்த காலம் நீடிக்கப்படும்.

(3) வெளிநாட்டு உதவிச்செயற்றிட்டங்களின் அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

தேவையான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் பொழிப்புரை யாக அட்டவணைப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய இருவரின் பெயர், முகவரிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரங்கள் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளின் நகல்பிரதிகளுடனான விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 2008, யூலை மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் மேற்புற இடது மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

செயலாளர்,
வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப்பயிற்சி அமைச்சு,

'நிபுனதா பியச',
354/2, அல்விற்றிகல மாவத்தை,
கொழும்பு 5,
2008.06.09.

6-484

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் " பெண் உதவி பொலிஸ் பரிசோதகர்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 27.07.2008 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்

படமாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

*3.* **சம்பள அளவுத்திட்டம்.**-ரூபா 1,90,200 - 7 X 2,160 - 2 X 2,880- 8 X 3,840 - 17 X 4,500 - ரூபா 3,18,300

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி:

(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள்:
(1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 12,000;
(2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 4,000.

அ. இலவச பயண வசதி ;
ஆ. உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;
இ. சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;
ஈ. விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;
உ. கடமைக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டமான சேவை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாக பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

அ. வயதெல்லை :

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பமுடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பெண் பொலிஸ் சாஜனோ அல்லது பெண் பொலிஸ் கொஸ்தாபல் உத்தியோகத் தர்களுக்கும் விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசி திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.)

ஆ. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியெய்திருக்கவும் வேண்டும்.

**குறிப்பு** *1.*- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களில் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு** *2.*- க.பொ. த. (சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு** *3.*- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :
உயரம் : 5 அடி 4 அங். (ஆகக் குறைந்தது)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிவின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

**(ஈ)** பார்வை தொடர்பான தேவை :
ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

(உ) பிற தகைமைகள் :
விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர் களுக்கும் இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமைகள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். இதில் சித்தியடைபவர்கள் மாத்திரம் கீழ்வரும் உடற் பயிற்சிகளில் பங்கு பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

(1) 1000 மீற்றர் - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்

பரீட்சையில் சித்தியெய்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர் நேர்முக பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை அடக்கி உள்ளது:-

* 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல்; 45 நிமிடங்களில்
* பொது அறிவும் பொது நுட்பமும் - 01 மணித்தியாலம்.

6. **வைத்திய பரீட்சை**.- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் உடைய விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன் வைத்திய பரீட்சைக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தி பெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணை**.- (அ) விண்ணப்பதாரியின் நன்நடத்தை தொடர்பாக, அவர் தொடர்பாகவும் கிட்டிய உறவினர்களதும், நண்பர்களினதும் நடத்தை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய் தகவல்கள் கொடுப்பது அவரை ஆட்சேர்ப்பதற்கு தகைமை அற்றதாகும். ஆட்சேர்ப்பின் பின் பொய்யான தகவல் கொடுத்துள்ள விடயம் வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெற்றல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப் படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

9. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி உடையதன் 41 ஆம் இலக்கமும் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்றஇலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பெற்றது) ஆந் திகதியினுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத் தொகையை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்த மொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) **பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்** .- பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) **பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்** .- பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) **பெண் உதவிப் பொலிஸ் பரிசோதகர்**.- பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);
(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;
(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;
(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);
(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ.) எனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x 8" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பெண் உதவி பொலிஸ் பரிசோதகர் பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

   (இ) விண்ணப்பதாரியின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
   (பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
   பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
   மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   (இ) நிரந்தர முகவரி :-----.
   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் :-----.

6. (அ) தேசிய இனம் :-----.
   (ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----
   (இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-
   (1) விண்ணப்பதாரர் :-----.
   (2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
   (3) விண்ணப்பதாரரின்தந்தை வழி பாட்டன் :-----.
   (4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரரின் வயது :-
   (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
   ஆண்டுகள் :-----,மாதங்கள் :-----, திகதி :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. வேறு ஏதேனும் விசேட தகுதிகள் /தகைமைகள் உண்டா ?

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
    (ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக. :-----.
    (அ) -----.
    (ஆ) -----.

15. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? :-----.

16. (அ) தற்போதைக்கு படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைத்தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண் ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

    (ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

17. படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

18. நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவை யாற்றியுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக. :-----.

19. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக. :-----.

20. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்து கின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவை யென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

6-500

---

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

### தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகள்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிகளுக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர், ஆட்சேர்ப்பு, ஆட்சேர்ப்பு அலுவலகம், 2 ஆம் மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 27.07.2008 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- பொலிஸ் கொஸ்தாபல் பதவி.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160 - 17 x 2,880 - ரூபா 2,54,100

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் படிகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினப்படி:
- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 1,200;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த படிகள் :
- (1) போர் நடைபெறும் பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 10,500;
- (2) போர் நடைபெறாத பிரதேசங்களில் கடமை பொருட்டு ரூபா 3,500.

(அ) இலவச பயண வசதி ;
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சை பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும்;
(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும்;
(ஈ) விளையாட்டுத் திறனை வளர்ப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்;
(உ) கடமைக்கான பிரயாணச் செலவுகள் கஷ்டமான சேவைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளை நிறைவு செய்வதற்காகவும் வெகுமதியாகவும் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசி திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம், தாய்மொழி அடங்கலாக ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- **கவனிக்க வேண்டியவை :-**

(அ) க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர் களுக்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.

(ஆ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் அல்லது க. பொ. த. உயர்தர பரீட்சையில் சங்கீத பாடத்தில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கும் போது விஞ்ஞான பாடஇலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களில் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையின் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சீத்தியடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்துக்குரிய தமிழ், ஆங்கிலம், சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப் படாமையால்

அப்பாடங்களில் சித்திபெறுதல் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

- பொலிஸ் கொஸ்தாபல் வாத்தியக்கோஷ்டி
  உயரம் : 5 அடி 4 அங். (ஆகக் குறைந்தது)

  மார்பு: 30அங். ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)
- பெண் பொலிஸ் கொஸ்தாபல் வாத்தியக்கோஷ்டி

  உயரம் : 5 அடி 2 அங். (ஆகக் குறைந்தது)

**குறிப்பு**: சிறந்த விளையாட்டுத்திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமைகாட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உயரமும், மார்பளவும் குறைவாக இருப்பினும் அவர் பிற தேவைகளை பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணி வின்படி ஆட்சேர்க்கும் பொருட்டான தகைமையை அவர் பெறுவார்.

(ஈ) ஆகக்குறைந்த தொழில் தகைமைகள் :
அரச அல்லது அரசுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சங்கீத நிறுவனம் ஒன்றில் பின்வருமாறு சங்கீதம் பயின்று பின்வரும் பரீட்சையில் சித்தி அல்லது ஆகக் குறைந்தது ஆறுமாத சங்கீத நெறியை பயில்வதற்கான சான்றிதழ் :-

(அ) மேலைநாட்டு இசை தொடர்பாக இலண்டன் றோயல் கல்லூரியில் அல்லது திரித்துவ கல்லூரியினால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சித்தி அல்லது,

(ஆ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மேலைநாட்டு சங்கீதப் பரீட்சையில் சித்தி அல்லது

(இ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மேலை நாட்டு சங்கீத நெறியொன்றைப் பயின்றிருத்தல்.

(ஈ) வாத்தியக்கருவிகளை இசைப்பதிலுள்ள ஆகக்குறைந்த திறமைகள் கீழ்வரும் வாத்தியக்கருவிகளுள் ஒன்றை அல்லது அதற்கதிகமான வகைகளை வாசிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

- மேலைநாட்டு வாத்தியக்கருவிகள் எனக் கருதப்படும் எக்காளம், ரொம்போன், இயுப்போனியம், பேஸ்ரியுபா, பிரண்ஸ் ஹோண், கிளரினட், சக்ஸபோன், புல்லாங்குழல், யாழ், பாக்பைப், சயிப்மத்தளம், பேஸ் மத்தளம், சிம்பள், சிம்பொனி ஆகியவற்றுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவைகளை வாசிக்கும் ஆற்றல் அல்லது நரம்புவாத்தியங்கள், நோட்டேஷன் போட் (Notation Board), ரைமிங் வாத்தியங்களில் ஆற்றல்.

- ஆரம்ப பரீட்சித்தலின் பின்னர் திறமையை பரீட்சிக்கும் முகமாக தொழில்சார் பரீட்சையும், வாய் மூலப்பரீட்சையும் நடாத்தப்படும்.

(உ) பார்வை தொடர்பான தேவை.- ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவர்.

(ஊ) பிற தகைமைகள் :
விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.)

- மேற்போன்ற அடிப்படைக்கல்வி பௌதீக தகைமைகளுடன் குறிப்பிட்ட வயதெல்லையை மீறாத வேறேதாவது விளையாட்டுத் துறைகளில் விசேட ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- இறுதி தெரிவு சபைமுன் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர் அடிப்படைத்தகைமைகள் பரிசோதிக்கும் பரீட்சை மனோ வலிமைப்பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- ஆரம்ப பரீட்சித்தலின்போது உடல் தகுதியின் கல்வித்தகைமை, மற்றும் தொழில்சார் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளும் பரீட்சிக்கப்படும்.

- தற்றுணிவு பரீட்சித்தலின்போது ஒவ்வொரு விண்ணப்பதாரியும் 1000 மீற்றர்தூரத்தை 3 நிமிடம் 24 விநாடிகளில் தொடர்ச்சியாக ஓடி முடிக்க வேண்டும்.

- தற்றுணிவு பரீட்சித்தலின்போது ஒவ்வொரு விண்ணப்பதாரியும் 1000 மீற்றர்தூரத்தை 5 நிமிடம் 44 விநாடிகளில் தொடர்ச்சியாக ஓடி முடிக்க வேண்டும்.

- தொழில்சார் பரீட்சித்தலில் ஆகக்குறைந்தது 50 புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

- இறுதியாக நேர்முகப்பரீட்சித்தலில் ஆகக்குறைந்தது 40 புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் தொழில்சார் பரீட்சித்தலில் பெற்ற புள்ளிகளுடன் கூட்டப்பட்டு முன்னுரிமையும் திறமையும் அடங்கிய பட்டியல் தயாரிக்கப்பட்டு, வெற்றிடங்களின் எண்ணிக்கையில் அடிப்படையில் ஆகக்குறைந்த தேவையான புள்ளிகள் தீர்மானிக்கப்படும்.

5. **அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந்திகதி பொது நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தினதும் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்க்கப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் 2007.07.01 ஆந் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

- நியமன தேதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் சம்பள ஏற்றம் தேர்ச்சியடையும் வரை நிறுத்தி வைக்கப்படும்.

6. **பதவிக்கமர்த்தல் நியதிகள்**.- இப்பதவி நிரந்தரமானது ஓய்வூதியத்திற்குட்பட்டது. விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு சந்தாப்பணம் கொடுத்தல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு காலத்துக்கு தகுதி காண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைவுறும் முகமாக ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளின் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங் கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தரும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல், தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய இயலாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானி - பகுதி II பிரகாரமும் 1952/2006 ஆம் இலக்க 2006.10.19 ஆந் திகதிய மற்றும் 2007.08.09 ஆந் திகதிய (திருத்தப்பெற்றது) பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரமும் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட கால தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணி யாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும், சீருடை முதலியவற்றிற்காகவும் செய்த செலவினங்கள் பொருட்டு விதிக்கப்படும் பணத் தொகையை செலுத்து வதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்த மொன்றில் கையொப்பமிடல் வேண்டும். அப்பணத் தொகை இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். பதவி விலகல்களை அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாய் இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் என்போர் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் படி பொலிஸ் நன்னடத்தைக் கோவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/ சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் என்போர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/ 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு அமைந்தொழுகுவதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் என்போர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

8. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின் படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

9. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்களை சமர்ப்பித்தல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைகளை சான்றுபடுத்தும் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

10. (அ) எனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11"x8" அளவுத் தாளிலான விண்ணப்பத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி கேட்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக் களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடி யாக கையளித்தலாகாது.

11. இவ்வறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பகாரர் களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

குறிப்பு.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

*தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பொலிஸ் கொஸ்தாபல், தகுதிகூர் நிலை மேலைநாட்டு வாத்தியக்கோஷ்டிக்கான பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்ப தாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
   (இ) பால் (ஆண்/பெண்) :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
   (பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.
   பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
   (இ) நிரந்தர முகவரி :-----.
   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையமும், தேர்தல் மாவட்டமும் : -----.

6. (அ) தேசிய இனம் :-----.
   (ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----
   (இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்கள் பிறந்த இடத்தைக் குறிப்பிடவும் :-

   (1) விண்ணப்பதாரர் :-----.
   (2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
   (3) விண்ணப்பதாரின்தந்தை வழி பாட்டன் :-----.
   (4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. பிறந்த திகதி :-
   (விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)
   வயது (வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு):
   ஆண்டுகள் :-----,மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.
9. கல்வித் தகைமைகள் : (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. திருமணம் ஆனவரா? /திருமணம் ஆகாதவரா ? :-----.

11. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

    (ஆ) நீங்கள் இலங்கை படைதாங்கு சேவையின் அங்கத்தவரா ? :-----.

12. வேறு ஏதேனும் விசேட திறமைகள் உண்டா ? :-----.

13. உங்களைப் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடிய உறவினர் அல்லாத இரு நபர்களின் பெயர்களையும் முகவரிகளையும் தருக:-
    (அ) -----.
    (ஆ) -----.

14. (அ) இலங்கைப் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு நீங்கள் இதற்கு முன்பு விண்ணப்பித்ததுண்டா? (அவ்வாறாயின்) இது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

    (ஆ) இதற்கு முன்பு நீங்கள் இலங்கைப் பொலிஸில் அல்லது இலங்கை உப சேவைப் பொலிஸில் சேவை செய்துள்ளீரா? அவ்வாறாயின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக? : -----.

15. (அ) தற்போதைக்கு படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அப்படைத்தாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

    (ஆ) படைதாங்கு சேவையில் இருந்திருந்தால் அதிலிருந்து விலகிய போது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

16. (அ) படைதாங்கு சேவையின் தொண்டர் அணியில் இருந்துள்ளீரா? அல்லது இருக்கின்றீரா? அவ்வாறு இருந்திருந்தால் படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும்.

    (ஆ) நீங்கள் எப்போதாவது அரசாங்கத்தின் கீழ் சேவையாற்றியுள்ளீர்களா? அவ்வாறாயின் நீங்கள் சேவையாற்றிய காலப்பகுதி திணைக்களம், பதவி ஆகியவற்றின் விபரங்களைத் தருக :-----.

17. நீங்கள் ஏதாவது ஒரு குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டோ அல்லது தண்டனை கொடுக்கப்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் விபரங்களைத் தருக :-----.

18. நீங்கள் அல்லது உங்கள் உறவினர் எவரேனும் தவறு சம்பந்தப் பட்டு அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டு அல்லது குற்றம் சுமத்தப்பட்டு அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட் டுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

6-501

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

காணி, காணி அபிவிருத்தி அமைச்சில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பொருட்டு, பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| 1. பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வீடியோ படப்பிடிப்பாளர் | 01 |
| படப்பிடிப்புக் கருவி இயக்குநர் (உதவியாளர்) | 01 |

2. **சம்பள அளவுத் திட்டம்.**- வீடியோ படப்பிடிப்பாளர்.- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (IV).**இன் பிரகாரம்** (MT 1- 2006 A - சம்பளத் தொகுதி) : ரூபா 14,425- 10x145- 11 x 170- 6 x 240- 14 x 320- ரூபா 23,665.

படப்பிடிப்புக் கருவி இயக்குநர் (உதவியாளர்) - பொது நிருவாக சுற்றறிக்கை இல. 06/2006 (IV).**இன் பிரகாரம்** (PL 1- 2006 A - சம்பளத் தொகுதி) : ரூபா 11,730- 10x120- 10 x 130- 10 x 145- 12 x 160- ரூபா 17,600.

3. **கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :**

(I) வீடியோ படப்பிடிப்பாளர் பதவி:
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில், ஒரே அமர்வில் 05 பாடங்களுடன், இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில், விஞ்ஞானம், கணிதம், மொழி (சிங்களம்/தமிழ்) ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தரப்) பரீட்சைகளில், ஒரே அமர்வில் 05 பாடங்களுடன், இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில், விஞ்ஞானம், கணிதம், மொழி (சிங்களம்/தமிழ்) உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியொன்றினால் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற நிழற்படப்பிடிப்பு மற்றும் வீடியோ படப்பிடிப்பு தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி நிறுவன மொன்றில், நிழற்படப் பிடிப்பு மற்றும் வீடியோ படப்பிடிப்பு தொடர்பான, ஒரு வருடத்திற்குக் குறையாத முழு நேர அல்லது இரண்டு வருடங்களுக்குக் குறையாத பகுதிநேர தொழில்சார் பாடநெறியை வெற்றிகரமாக பின்பற்றி சான்றிதழ் பெற்றிருத்தல்

மற்றும்

அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில், வீடியோ படப்பிடிப்பாளராகவும் நிழற் படப்பிடிப்பாள ராகவும் பணியாற்றி 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

(இது சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

(II) படப்பிடிப்புக் கருவி இயக்குநர் (உதவியாளர்) பதவி

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்/ தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் 05 பாடங்களுடன், இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நிழற்படக் கருவியை (கெமறா) இயக்குவதில் காணப்படும் அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

4. **ஏனைய தகைமைகள்.**- மேலே இரு பதவிகளுக்குமாக ஏனைய தகைமைகள் வருமாறு:-

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேக ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **ஆட்சேர்ப்பு நடைமுறை .**-கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலமும் செயன்முறைப் பரீட்சை மூலமும் தகுதியானவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

6. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் .**- (i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவை அனாதைகள்/தபுதாரர் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தாபன விதிக் கோவையின் அத்தியாயம் II இன் 10- 12 வரையிலான பந்திகள் ஏற்புடையதாகும்.

(iii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 5 வருட காலப்பகுதியினுள், 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்க பொதுநிருவாக சுற்றறிக்கையின் மூலம் தேவைப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2008.07.18 ஆகும். இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, " செயலாளர், காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, இல. 80/5, கொவிஜன மந்திரய" இராஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையி லுள்ள உத்தியோகத்தர்கள், தமது விண்ணப்பங்களை தமது திணைக் களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப் படாத விண்ணப்பங்களும், சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங் களும், உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும்

நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்" ............. பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

செயலாளர்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சு.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
இல. 80/5, கொவிஜன மந்திரய,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை
2008.06.12.

அலுவலக உபயோகத்திற்கு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**
........................................ பதவி

(இல. 1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்).

1. (அ) விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :
(ஆ) முதலெழுத்துக்களுக்குரிய பெயர்கள் :----.

2. (அ) சொந்த முகவரி :----.
தொலைபேசி இல.

(ஆ) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இல. :----.

3. பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

5. தேசிய அடையாள அட்டை இல :----.

6. பால் :----.

7. கல்வித் தகைமைகள் :----.

(அ) க. பொ. த. (சா. த) பரீட்சை./தே. பொ. க. ச. பரீட்சை
சுட்டெண் :----. வருடம் :---- மொழிமூலம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7 | |
| 8. | |

(ஆ) க. பொ. த (உ. த) பரீட்சை
சுட்டெண் :----. வருடம் :---- மொழிமூலம் :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8. தொழில்சார் தகைமைகள்: ..........................................
(சேவைச் சான்றிதழ் இருப்பின் அவற்றின் நிழற்படப்பிரதிகளை இணைக்கவும்)

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விவரங்களுள் ஏதும் பிழையானதென அல்லது பொய்யானதென இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரிய வந்தால் நான் இப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனத்திற்குப் பின்னர் தெரிய வந்தால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பத்தாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு. / திருமதி / செல்வி ............................ என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கு அறிவேன் எனவும், இவர் என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.
பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.

**(அரச/மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)**

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரினால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும், இவர் எந்தவித ஒழுக்காற்று விதிகளையும் மீறவில்லை என்பதையும் பிரகடனம் செய்கின்றேன். இவரது விண்ணப்பத்தை சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை. இவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

............................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.
இறப்பர் முத்திரையும்

6-561

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2007

இலங்கை அரசின் 1997.11.19 ஆந் தேதிய 1002/13 ஆம் இலக்க இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறான இலங்கை நூலகர் சேவைப் பிரமாணக்குறிப்பின் 09 ஆம் 10 ஆம் பந்திகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இலங்கை நூலகர் சேவை தரம் II இலும் தரம் III இலும் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையொன்று 2008, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

2. (i) இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சைக்கென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டொழுகுதலும் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கென விதிக்கப்பட்டுள்ள விதிகள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன. இவ்விதிகளை மீறுவோர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாவார்.

3. இப்பரீட்சைகளுக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தமது விண்ணபத்தை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய சரியாகவும், தெளிவாகவும் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக பதிவுத்தபாலில் 2008, யூலை மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரியைச் சென்றடையும் வண்ணம் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிரா கரிக்கப்படும்.

4. **அடையாள அட்டை**.- விண்ணப்பதாரிகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் தமது அடையாளத்தைப் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக, கீழேயுள்ள ஆவணங்களுள் எவையேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு. (பாஸ்போட்).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுள் ஏதாவது ஒன்றையேனும் சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரியினது பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் இரத்துச் செய்யப்படலாம்.

5. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பங்கள் 8"x 12" அளவினதான ஒரு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து இல. 01 - இல. 05 வரை முதலாவது பக்கத்தில் இல. 06 - இல. 09 வரை இரண்டாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சில் பொறிக்கப்பட்டு அனுப்பப்படலாம் ஆனால், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் பயனுள்ளதாகும். பரீட்சை விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் கொடுக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்குமாறு அவரால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை உறுதிப்படுத்துதல் விண்ணப்பதாரியின் பொறுப்பாக உள்ளது.

முதல் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்தவேண்டிய அவசியமில்லை. எனினும், அடுத்த தடவையாகத் தோற்றும் அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 175 ரூபாவும் தனியாக ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 90 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்படுதல் வேண்டும். இப்பணத்தொகையை நாட்டில் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பிற்கு 4000-20-03-20-13 எனும் வருமானத்தலைப்பிற்கு வரவு வைத்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. என்பதுடன் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றுதல் தொடர்பாக அனுமதி வழங்கப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றைத் தன்வசம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாகும்.

6. உரியவாறு பரீட்சைக் கட்டணம் செலுத்தி சரியாக விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பியுள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டையுடன் நேரசூசியின் பிரதியையும் அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் ஏற்கனவே அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளில் தங்களுடைய கையொப்பங்களை இட்ட அதனை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டைகள் இல்லாத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பரீட்சார்த்தியொருவர் பரீட்சைத் தேதிக்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் தமது அனுமதி அட்டையைப் பெற்றிராதவிடத்து அவர் உடனடியாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல (தந்தி முகவரி "பரீட்சை பத்தரமுல்ல") எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அதுபற்றி அறிவிக்க வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(இ) முழு அஞ்சல் முகவரி ;
(ஈ) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவுத் தபால் இலக்கம், அத்துடன் கடிதம் அனுப்பிய தேதி ;
(உ) பரீட்சை கட்டணம் செலுத்தியிருந்தால் அதன் சான்றுப்படுத்திய நிழற்படப்பிரதி.

விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டதும், இது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அறிவிப்பு

வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதி, பதிவு செய்த பற்றுச்சீட்டு, கொழும்பில் இருந்து வெளியிடமாயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் குறிப்பிட்டு கோரிக்கை கடிதம் என்பவற்றுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையை பெற்றுள்ள அவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுமுகமாக திணைக்களத் தலைவர்களால் கடமை விடுமுறை வழங்கப்படவேண்டும். பிரயாணச் செலவுகளெதுவும் வழங்கப்படமாட்டாது.

8. விண்ணப்பதாரிகள் தொடர்புடைய சேவைக்கு சேர்வதற்காக தோற்றிய மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளிக்க வேண்டும். போட்டிப் பரீட்சை இன்றி இச்சேவையிற் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழியில் அல்லது அரசகரும மொழியில் இரு வினாத்தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும். விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் மொழிமூலமானது அதன் பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

9. அலுவலர்கள் ஒவ்வொரு பாடத்திற்கு தனித்தனியாகவும் வேறுபட்ட தடவைகளிலும் தோற்றமுடியும். எவ்வாறாயினும், சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் ஆகக் குறைந்தது ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுகை**.- பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்படும். பரீட்சையிற் சித்தியெய்திய அலுவலர்களின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

11. **பரீட்சைத் திட்டம்**:

11.1 **நூலகச் சேவை தரம் III இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :**

(i) பொது நிர்வாகம் - (நேரம் 02 மணித்தியாலங்கள்) (பாட இலக்கம் - 01) புள்ளிகள் 100

தாபன விதிக்கோவையின் I முதல் VIII வரையும் : அத்துடன் XII, XIV, XXIV, XXVII, XXVIII, XXXI, XXXII, XXXIII, அத்தியாயங்களும் உள்ளடங்கும்.

(ii) நிதி முறைமைகள்.- (நேரம் 02 மணித்தியாலங்கள்) (பாட இலக்கம் - 02) புள்ளிகள் 100

நிதி ஒழுங்குவிதிகள் - பகுதி I (X ஆம் அத்தியாயம் புறநீங்கலாக)

நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளும்.

**கவனிக்க வேண்டியது**.- விண்ணப்பதாரிகள் இப்பரீட்சையிற் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கான புள்ளிகளில் குறைந்த பட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**11.2 நூலகர் சேவை தரம் II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை ;**

1. பொது நிர்வாகமும் நிதி முறைமையும்.- நேரம் 03 மணித்தியாலங்கள்.- (பாட இலக்கம் - 03) - புள்ளிகள் 100

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம்.
(ii) தாபனவிதிக் கோவையின் அத்தியாயங்கள் I முதல் VIII வரையும் : அத்துடன் XIV, XXIV, XXVII, XXVIII, XXXI, XXXII, XXXIII அத்தியாயங்களும் உள்ளடங்கும்.
(iii) இலங்கை நூலகச் சங்க கூட்டிணைப்புச் சட்டம் - 714
(iv) இலங்கை நூலகச் சேவைச் சபைச் சட்டம்
(v) புலமைச் சொத்துக்கள் சட்டம்
(vi) நிதி ஒழுங்கு விதிகள் - பகுதி 1
(vii) நூலகர்களால் நிறைவேற்றப்படும் கணக்கீட்டு வேலையும் அதனுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதியும்.

2. நூலக ஒழுங்கமைப்பு - நேரம் 03 மணித்தியாலங்கள்.
(பாட இலக்கம் - 04) - புள்ளிகள் 100
(i) நூலகங்களின் வகுதிகளும், சேவைகளும்
(ii) நூலக வளங்களும், அமைப்புகளும்
(iii) அரசாங்க வெளியீடுகளும் அவற்றின் பாவனையும்

**கவனிக்க வேண்டியது**.- இப்பரீட்சையிற் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% புள்ளிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்பட்டிராத ஏதேனும் விடயம் தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதியானதாயிருக்கும்.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
இணைந்த சேவைகள் பிரிவு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2008, யூன் மாதம் 11 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் II ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 2007**

**(EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS IN GRADE III AND II OF THE SRI LANKA LIBRARIANS' SERVICE - 2007)**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

1.0

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்கள் இறுதியில் வரத்தக்கதாக முதலெழுத்துக் களுடன் பெயர் :-----.
(ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில் - உதா: SILVA, A. B.)

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-

2.1 அமைச்சு/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் :-----.

2.2 அலுவலக முகவரி :-----.

3.0 பால் : (பெண் - 1, ஆண் - 0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

4.0 இலங்கை நூலகர் சேவையில் நீங்கள் விண்ணப்பிக்கும் வினைத்திறன் காண்தடை பரீட்சைக்கு எதிரில் 'X' அடையாளத்தை இடவும்.

| | |
|---|---|
| 4.1 நூலகர் சேவை தரம் III | |
| 4.2 நூலகர் சேவை தரம் II | |

4.3 நீங்கள் பரீட்சைக்கு தோற்றும் பாடங்களும் பாட இலக்கமும் :-

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |

5.0 5.1 தேசிய அடையாள அட்டை இல.

5.2 பிறந்த திகதி :

ஆண்டு ____ மாதம் __ திகதி __

6.0 தற்போது வகிக்கும் பதவி

6.1 பதவி :-----.

6.2 நியமனக் கடிதத்தின் இல. :-----.

7.0

7.1 நீர் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? :--.

7.2 இல்லாவிட்டால் வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பரீட்சை கட்டணம் செலுத்தி பணம் செலுத்தியமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின்

இலக்கம் :-----. பணத்தொகை :-----.

திகதி :-----. வழங்கிய அஞ்சல் அலுவலகம் :-----.

| |
|---|
| பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டைக் கழறாதவாறு ஒட்டிவிடவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்) |

8.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே காட்டப்பட்டுள்ள அதே மொழியில் அப்பரீட்சைக்குத் தோற்றி விடையளிப்பதற்கு நான் தகுதியுடையவனென்றும், எவ்விதத் திலானதொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுக இத்தால் உடன்படுகின்றேன்.

................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9.0 **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்** :

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தின் சேவையிலுள்ள நூலகர் சேவை தரம் II/ III ஐச் சேர்ந்த ஓர் அலுவலரென்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,

(iii) இவருடைய வேலையும் நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,

(iv) இவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமையுடையவர் என்றும்,

(v) உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தியுள்ளார் என்றும் இப் பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்ற சொற்களை கீறிவிடவும்)

நான் சான்றுப்படுத்துகின்றேன்.

...................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

6-547

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.